இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2016

''தமிழ்நாடு நாள் விழாவை'' இன்று (18.11.2016)

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

---

புதுடெல்லியில் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2016 "தமிழ்நாடு நாள் விழாவை" இன்று (18.11.2016) மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. 36–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2016, நவம்பர் 14ஆம் தேதி தொடங்கப்பட்டு, வரும் 27ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இப்பொருட்காட்சியில் 27 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்கள், வெளிநாடுகள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கேற்றுள்ளன.

நடப்பாண்டில் இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "மின்யுக இந்தியா" (Digital Inida) என்பதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத் துறையில், வியக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இந்தியாவில், மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநிலத் தரவு மையங்கள் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்திய ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

தமிழகம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல்தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளான வங்கியியல், நிதி சேவைகள் மற்றும் காப்பீடு (Banking, Financial Services and Insurance - BFSI), சுகாதாரத் திட்ட மேலாண்மை (Health Systems Management), கணினி சார்ந்த வடிவமைப்பு (Computer Aided Designing - CAD) மற்றும் கணினி சார்ந்த பொறியியல் (Computer Aided Engineering - CAE) போன்றவற்றின் சிறப்பிடமாக, மாநிலத்தை மாற்றும் வகையில் திறன்வாய்ந்த மனித வளத்தைத் திறம்பட உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்து மின் ஆளுமை முயற்சிகளையும் செயல்படுத்தும் முகமையாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மின்ஆளுமை முகமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு சேவைகள் பொதுமக்களுக்கு விரைவாகவும், வெளிப்படையாகவும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இந்தியாவிலேயே அதிக அளவில் ஆதார் அட்டை அச்சிட்டு விநியோகித்ததற்கான முதற் பரிசினை மத்திய தகவல் தொழில்நுட்பத் துறையிடமிருந்து பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு அரங்கில் உள்ள இ–சேவை மையம் மூலம் பிளாஸ்டிக் ஆதார் அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரங்கினை இன்று **(18.11.2016)** பார்வையிட்ட மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் இ–சேவை மையம் மூலம் அச்சிடப்பட்ட பிளாஸ்டிக் ஆதார் அட்டைகளை இரு பார்வையாளர்களுக்கு வழங்கினார்கள்.

தகவல் தொழில்நுட்பத்தின் சமீபகால வளர்ச்சிகளான மேகக்கணினியம், மாநிலத் தரவு மையம், இணைய இணைப்பு, பகிர்மான தரவு சேமிப்பு மற்றும் பகிர்மானம் சார்ந்த வளங்களின் பரிமாற்றம் போன்றவற்றின் ஒருங்கிணைப்பிற்கு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆதார அடிப்படையாக விளங்குகிறது.

தமிழ்நாடு அரங்கில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம், மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சுற்றுலாத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மைத் துறை, தமிழ்நாடு மாநில வேளாண்மை வணிக வாரியம், தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு உப்புக் கழகம் ஆகிய **14** அரசுத் துறைகள் பங்கேற்று தங்கள் துறையின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் செயல்விளக்க மாதிரிகளைச் (Models) சிறப்பான முறையில் நேரடிக் காட்சியாக பொதுமக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர்.

இவ்வரங்குகளில், அரசின் சாதனை விளக்கப் படக்காட்சிகள் தொடர்ந்து ஒளிப்பரப்பப்பட்டு வருகின்றது. மேலும், அரங்கிற்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கு அரங்கில் இடம்பெற்றுள்ள துறைகளின் சாதனைகள் குறித்த கையேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினைக் கொண்டாடி வருகின்றனர். அவ்வகையில், “தமிழ்நாடு நாள்” விழா இன்று **(18.11.2016)** பிரகதி மைதானத்தில் உள்ள ‘லால் சௌக்’ கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., அவர்கள், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், எம்.பி., அவர்கள் ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. உல. ரவீந்திரன் அவர்கள் வரவேற்புரையும், திரு. சா. சுரேஷ் குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொருட்காட்சி) அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்.

இவ்விழாவில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு, கண்டு களித்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன்,இ.ஆ.ப., அவர்கள், டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர்.